<u>**ADM COURT, SANKARANKOVIL**</u>

**தேதி 22.07.2025**

**அசல் வழக்கு எண். 255/2013**

<u>**வா.சா.2 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு தற்போது எவ்வளவு வயதாகிறது என்றால் 60 வயதாகிறது. நான் பிறந்ததிலிருந்து தற்போது வரை வீரிருப்பு கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தந்தை சுந்தரய்யா என்பவரும் காவேரிகோனார் என்ற செல்லையாகோனார் என்பவரும் உடன்பிறந்த சகோதரர்களா என்றால் இல்லை. அவர்கள் இருவரும் பெரியப்பா, சித்தப்பா மகன்கள். மேற்படி காவேரி கோனார் என்ற செல்லையாகோனாரின் என்பவரின் மனைவி பெயர் சண்முகம் என்றால் சரிதான். மேற்படி காவேரி கோனார் என்ற செல்லையாகோனாருக்கு ஆண் வாரிசு இல்லை என்றால் சரிதான்.

2. வாதிகளின் தாயார் சிவனாத்தாள் என்பவரும் முத்தாத்தாள் என்பவரும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். மேற்படி சிவனாத்தாள் எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து சுமார் 20 வருடங்கள் இருக்கும். 1ம் வாதி வேலம்மாள் துரைச்சாமியாபுரத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

3. புல எண்.83/1 ல் உள்ள தபசில் சொத்தை 1, 2 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்று சொல்வது பொய் என்றால் 1ம் பிரதிவாதி முத்தாத்தாள் மட்டும் மேற்படி தபசில் சொத்தை அனுபவித்து வந்தார். மேற்படி தபசில் சொத்திற்கு பின்புறம் உள்ள கிணற்றை 35 வருடங்களுக்கு முன்பு காவேரி கோனார் என்ற செல்லையாகோனார்தான் வெட்டினார் என்றால் சரிதான். மேற்படி கிணறு தற்போது மூடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றை காவேரி கோனார் என்ற செல்லையகோனார் கடன்வாங்கி ஏற்படுத்தினாரா அல்லது சொந்த பணத்தில் ஏற்படுத்தினாரா என்றால் கடன் வாங்கி ஏற்படுத்தியதாக கேள்விப்பட்டேன். காவேரி கோனார் என்ற செல்லையகோனார் பிராது தபசில் சொத்தை தவிர்த்து

அவருக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களை அவர் உயிருடன் இருந்தபோதே விற்றுவிட்டார் என்றால் சரிதான்.

4. தபசில் சொத்திற்கு மேற்கு பக்கத்தில் தென்வடல் சாலை உள்ளது என்றால் சரிதான். தபசில் சொத்து சர்வே எண்.83/1ல் எத்தனை வீடுகள் உள்ளன என்றால் 5 வீடுகள் உள்ளன. மேற்படி தென்வடல் சாலைக்கு கீழ்புறத்தில் உள்ள முதல்வீடு யாரால் கட்டப்பட்டது என்றால் எனக்கு அந்த வீட்டை கட்டியவர் பெயர் தெரியாது. மேற்படி வீட்டிற்கு கீழ்புறத்தில் உள்ள வீடு யாருடைய வீடு என்றால் சண்முகத்தாய் என்பவருடைய வீடு. மேற்படி சண்முகத்தாய் வீட்டிற்கு கீழ்புறம் உள்ள வீடு யாருடையது என்றால் அந்த வீட்டை கட்டியவர் பெயர் தெரியாது. மேற்படி 3 வீடுகளுக்கும் தென்புறம் உள்ள வீடு யாரால் கட்டப்பட்டது என்றால் பாரதி என்பவரால் கட்டப்பட்டது. மேற்படி 3 வீடுகளுக்கும் வடபக்கத்தில் காலிமனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலிமனைக்கு வடக்குப்பக்கத்தில் குடியிருக்கும் நபரின் பெயர் என்னவென்றால் ராமகிருஷ்ணன். மேற்படி ராமகிருஷ்ணன் எத்தனை வருடங்களுக்கு முன்பு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சுமார் 10 வருடங்கள் இருக்கும். ராமகிருஷ்ணன் வீட்டிற்கு வடக்குபக்கத்தில் அரசப்பன் என்பவருடைய வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி அரசப்பன் எத்தனை வருடங்களாக அந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் சுமார் 20 வருடங்களாக குடியிருந்து வருகிறார்.

5. அரசப்பன் வீட்டிற்கு வடக்குப்பக்கத்தில் உள்ள இடங்களுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் உண்டா என்றால் இல்லை. சர்வே எண்.83/1ல் எத்தனை பிளாட்டுகள் போடப்பட்டன என்றால் மேற்படி சர்வே எண்ணில் போடப்பட்ட பிளாட்டுகளில் 15 பிளாட்டுகள் விற்கப்பட்டன. தற்போது 4-5 பிளாட்டுகள் விற்கப்படாமல் உள்ளன. 2ம் வாதி அருணாச்சலத்தின் அப்பா பெயர் என்னவென்றால் அருணாச்சலம். மேற்படி 2ம் வாதி அருணாச்சலத்தின் குடியிருப்பு எனது வீட்டிற்கு மேற்குப்பக்கத்தில் உள்ள தெருவில் உள்ளது.

6. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதிக்கூற்றில் காவேரி கோனார் என்ற செல்லையகோனார் அரசிடம் கிணறு வெட்டுவதற்காக ரூ.3000 கடன் பெற்றுவிட்டு இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடன் பணத்தை திரும்ப செலுத்தாததால் சர்வே எண்.83/1 இடத்தை சர்க்கார் புறம்போக்கு இடமாக மாற்றப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சர்வே எண்.83/1ல் பஞ்சாயத்து கிளார்க் ஈஸ்வரன் என்பவர் சிறிதுகாலம் பயிரிட்டு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி காவேரி கோனார் என்ற செல்லையகோனார் பெற்ற ரூ.3000 கடனுக்கு சிவனாத்தாள் மற்றும் வேலம்மாள் சேர்ந்து தலா ரூ.1000 1ம் பிரதிவாதியிடம் கொடுத்தனர் என என் நிரூபண உறுதிக்கூற்றில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி ரூ.3000 ல் ரூ.1000 மட்டும் 1ம் பிரதிவாதி செலுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்படி கடன் பணம் ரூ.3000யை முழுவதுமாக முத்தாத்தாள் என்பவர்தான் கட்டி அந்த சொத்தை மீட்டார் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களுக்கும், 1,2 வாதிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

7. சர்வே எண்.83/1ல் உள்ள இடத்தை கடன் பணத்தை கட்டி மீட்டியபிறகு முத்தாத்தாள், சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் 3 பங்குகளாக பிரித்துக்கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பிரிவினை செய்து கொண்டபிறகு சிவனய்யா மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் அவர்களது பங்கை பொறுத்து 3ம் நபர்களுக்கு கிரையம் கொடுத்தனர் என்றால் சரிதான். சர்வே எண்.83/1ல் உள்ள சொத்தை முத்தாத்தாள், வேலம்மாள் மற்றும் சிவனாத்தாள் ஆகிய மூவர் பெயரில் மறுஒப்படைப்பு செய்யமுடியாது என்பதால்தான் 1ம் பிரதிவாதி பெயரில் மட்டும் மறு ஒப்படைப்பு செய்யப்பட்டது என்று எனது நிரூபண உறுதிக்கூற்றில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.83/1ல் உள்ள இடம் அரசால் கையகப்படுத்தப்பட்ட

விபரமும், முத்தாத்தாள் என்பவர் கடன் தொகையை திரும்ப செலுத்தி மீட்டுக்கொள்ளப்பட்ட விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**